DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai
**CC. No. 99/2024**

**Cross examination of PW1** Dt. 23.02.2026

| | |
|---|---|
| Name | ஜகபர்அலி |
| Father's/Husband's Name | அமீர்பாட்ஷா |
| Village | நீடூர் |
| Taluk | மயிலாடுதுறை |
| Age | 64/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 23.02.2026
(Accused present)

எதிரி தரப்பில் மேற்படி சாட்சியை குறுக்கு விசாரணை செய்வதற்காக மீண்டும் அழைத்து விசாரிக்க **Crl.MP. No. /2026** மனுதாக்கல் செய்யப்பட்டு செலவு தொகை ரூ. 500/- செலுத்தியதின் பேரில் மேற்படி மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

என்னுடைய நிரந்தர குடியிருப்பு எந்த ஊர் என்றால் நீடூர் ஆகும். புகார்தாரர் முகமது அலி பிறந்தது, வளர்ந்தது, படித்தது அனைத்தும் மலேசியாவில் என்றால் சரிதான். புகார்தாரரின் மனைவி மற்றும் குடும்பத்தார் எங்கு உள்ளார்கள் என்றால் மலேசியாவில்தான் உள்ளார்கள். புகார்தாரர் உயிருடன் உள்ளாரா என்றால் இல்லை இறந்துவிட்டார். கடந்த 07.11.2022 அன்று இறந்துவிட்டார். அவர் இறந்ததை காட்டக்கூடிய ஆவணம் எதுவும் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. புகார்தாரர் எதிரிக்கு 2009 ஆம் ஆண்டு கொடுத்ததாக சொல்லப்படும் பவர் பத்திரத்தை நான் பார்த்ததில்லை என்றால் சரிதான். மேற்படி பவர் பத்திரம் மலேசியாவில் தயார் செய்யப்பட்டதால் அது பற்றி எனக்கு தெரியாது என்றால் அது பற்றி புகார்தாரர் முகமது அலி என்னிடம் தெரிவித்தார். நேரடியாக தெரியாது என்றால் சரிதான். புகார்தாரர் எதிரிக்கு எழுதி கொடுத்த பவர் பத்திரம் மயிலாடுதுறை சார் பதிவாளர் அலுவலகத்தில் Adjudicate செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பவர் பத்திரம் இதுநாள்வரை எழுத்து மூலமாக ரத்து செய்யப்படவில்லை என்றால் சரிதான். 2019 ஆண்டு போலியாக பவர் பத்திரம் தயார் செய்ததாக தெரிவித்துள்ளேன். அது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான் முகமது அலி சொல்லி தான் எனக்கு தெரியும். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றால் விசாரித்தார்கள். தேதி என்ன என்றால் தேதி நினைவில்லை இரண்டாவது மாதம் 2020 ஆம் ஆண்டு போலீசார் என்னை விசாரித்தார்கள். அவ்வாறு என்னை விசாரணை செய்தது நாகப்பட்டினம் மாவட்ட நிலஅபகரிப்பு பிரிவு அலுவலகத்தில் வைத்து என்றால் சரிதான். மேற்படி நில அபகரிப்பு பிரிவு அலுவலகம் நாகப்பட்டினம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இயங்கி வருகிறது என்றால் சரிதான். இந்த வழக்கை பொறுத்து 2009 மற்றும் 2019 ஆண்டிற்கான பவர் பத்திரங்கள் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும், முகமது அலி சொல்லித்தான் தெரியும் என்றாலும் சரிதான். அசா.2 பைசல்ரகுமான் எனது மாமன் மகன் ஆவார். 2019 ம் ஆண்டு பவர் பத்திரத்தின் அடிப்படையில் எதிரியால் செய்து கொடுக்கப்பட்ட கிரயபத்திரங்களை ரத்து செய்யக்கோரி முகமதுஅலி மயிலாடுதுறை சார்பு நீதிமன்றத்தில் OS No. 385/2019 வழக்கு தாக்கல்

A. Sathalai

23/2/26

செய்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியும். அந்த வழக்கினை சமரமாக பேசி முடித்துவிட்டதாக முகமதுஅலி என்னிடம் கூறினார். அந்த வழக்கை தாக்கல் செய்த முகமதுஅலி அந்த வழக்கை நடத்தாமல் வாபஸ் பெற்று கொண்டார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். மேற்கண்ட வழக்கு யார் யார் மீது தாக்கல் செய்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. முகமதுஅலி தாக்கல் செய்த வழக்கில் எதிரியிடம் கிரயம் பெற்ற ரெஜினா பேகம், முகமது சுகைல் மற்றும் 4 நபர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். 2019 ம் ஆண்டு புகார்தாரர் எதிரிக்கு எழுதி கொடுத்த பவர் பத்திரம் மயிலாடுதுறை சார்பதிவாளர் அலுவலகத்தில் Adjudicate செய்யப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 2009, 2019 ல் எதிரிக்கு புகார்தாரர் முகமது அலி கொடுத்த பவர் பத்திரம் இன்றளவும் செயல்பாட்டில் இருந்து வருகிறது என்றால் 2012 ம் ஆண்டே முகமது அலி எதிரிக்கு கொடுத்த பவர் பத்திரத்தை ரத்து செய்தததாக என்னிடம் முகமது அலி தெரிவித்தார். 2009, 2019 ல் எதிரிக்கு புகார்தாரர் முகமது அலி கொடுத்த பவர் பத்திரத்தை போலீசாரிடம் புகார்தாரர் கொடுத்துள்ளாரா என்றால் கொடுத்துள்ளார். 2009 ம் ஆண்டு எதிரிக்கு புகார்தாரர் முகமது அலி கொடுத்த பவர் பத்திரத்தை வைத்து எதிரி இரண்டு கிரய பத்திரம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 2019 ம் ஆண்டு எதிரிக்கு புகார்தாரர் முகமது அலி கொடுத்த பவர் பத்திரத்தை வைத்து எதிரி 2 சொத்துக்களை விற்றுள்ளாரா என்றால் விற்றுள்ளார். ஆனால் புகார்தாரர் 2019 ம் ஆண்டு எதிரிக்கு பவர் பத்திரம் எதுவும் எழுதி கொடுக்கவில்லை. 2009, 2019 ம் ஆண்டுகளில் புகார்தாரர் முகமது அலி எதிரிக்கு பவர் பத்திரம் எழுதி கொடுத்துள்ளார் என்றாலும், நான் புகார்தாரரின் உறவினர் என்பதால் 2019 ம் ஆண்டு புகார்தாரர் முகமது அலி எதிரிக்கு பவர் பத்திரம் எழுதி கொடுக்கவில்லை என இந்த வழக்கை அனுசரித்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2019 ம் ஆண்டு புகார்தாரர் முகமது அலி எதிரிக்கு பவர் பத்திரம் எழுதி கொடுத்த விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் தெரியாது. அவ்வாறு 2019 ம் ஆண்டு புகார்தாரர் முகமது அலி எதிரிக்கு பவர் பத்திரம் எழுதி கொடுக்கவில்லை என புகார்தாரர் முகமது அலி என்னிடம் தெரிவித்தார்.

A. Sahn

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

M. [signature] 23/2/26
நீதித்துறை நடுவர் எண்-1
மயிலாடுதுறை